கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ); ஆம், வரி செலுத்துவோர் சங்கங்கள், குழுக்கள், பல்வேறு நிறுவன அமைப்புகள், சில நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றின் மூலம் பொதுமக்களிடமிருந்து இது குறித்து ஏராளமான முறையீடுகள் வந்துள்ளன. இவற்றை அரசாங்கம் கவனமாகப் பரிசீலனை செய்தது. 1—4—1966 முதற்கொண்டு பொதுவாக வரி விதிப்பு திருத்தியமைக்கப்பட வேண்டிய நகராட்சிகளைப் பொறுத்த வரையில், அவற்றில் அத் தேதி முதற்கொண்டு அவ்வாறு திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் 1—4—1966 முதற்கொண்டு தொடங்கும் இரண்டு அரை ஆண்டுகளுக்கு நிறுத்திவைக்கப்படவேண்டுமென தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிச் சட்டத்தின் IV-வது விவர அட்டவணையின் 8 (1-A) (a) விதியின்கீழ் அரசாங்கம் கட்டளையிட்டுள்ளது.

திரு. செ. மாதவன் : அந்தத் தேதிக்கு முன்னாலேயே வரியை உயர்த்தி இருந்தால் ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து திருத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சமீபத்தில் நிறுத்தி வைத்துள்ள quinquennial revision 15 நகராட்சிக்கு பொருந்தும். மற்ற நகராட்சிகளுக்கும் இந்த விதிமுறைகளை நீடிக்க சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

நாகம்பந்தல் லிங்கத்தேரி

*530 கேள்வி.—**திருமதி செகதாம்பாள் வேலாயுதம்** : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உடையார்பாளையம் தாலுக்காவில் நாகம்பந்தல் கிராமத்திலுள்ள ஏரியிலிருந்து நீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தாமல் குடிப்பதற்கும், குளிப்பதற்கும் பயன்படுத்த வேண்டுமென்று அண்மையில் அக்கிராம பொது மக்கள் கையெழுத்திட்டு அனுப்பிய மனுவின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பாசனத்துக்குப் பயன்பட்டு வரும் லிங்கத்தேரியின் நீரை குடிதண்ணீராகவும் மற்றும் பல சமுதாயக் காரியங்களுக்கும் பயன்படுத்துமாறு வேண்டி, நாகம்பந்தல் பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து 9—2—1966 தேதியிட்ட ஒரு கடிதமும் அக்கிராம மக்களிடமிருந்து ஒரு முறையீடும், திருச்சிராப்பள்ளி கலெக்டருக்கு வந்தன. ஜயங்கொண்டான் தாசில்தாரையும், அரியலூர் வருவாய்க் கோட்ட அதிகாரியையும் கலந்தாலோசித்த பிறகு, தக்க நடவடிக்கையைக் கலெக்டர் மேற்கொண்டார். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவேண்டியுள்ள அவசியத்தைக் கருதி, இந்த ஏரியின் நீரைப் பாசனமல்லாத பிற காரியங்களுக்குப் பயன்படுத்துவது அவசியமில்லை என்று கருதப்பட்டது.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம் : தலைவர் அவர்களே, இது ஆயிரக்கணக்கானவர்களுக்கு குடிதண்ணீருக்கு பயன்படுகிற குளமாக இருக்கிறது. ஆடுமாடு குளிப்பாட்டும் வசதியும் இருக்கிறது.

8th November 1966]

பாசனத்திற்கு தண்ணீர்விட்டுவிட்டால் குடிதண்ணீருக்கு நல்ல கோடை மாதங்களில் கஷ்டம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே குடிதண்ணீருக்கு மட்டும்தான் பயன்படுத்தப்படவேண்டும் என்ற அளவில் இதை வைக்க முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : செட்டில்மெண்டு காலத்தில் இந்த ஏரிப் பாசனத்திற்குப் பயன்படுகிற ஒன்ருக ஆயக்கட்டுக்கு உட்பட்டு அமைந்திருக்கிறது. ஆகவே, விவசாயத்திற்குப் பயன் படுத்தக்கூடாது என்று தடுக்க முடியாது. தடுக்கவும் அரசாங்கம் விரும்பவில்லே.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்க அம்பலம் : அந்த ஏரியைக் குடிதண்ணீருக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்ப தாக ஏற்படுத்தவேண்டும் என விவசாயிகளே விண்ணப்பித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறுர்கள். விவசாயிகளே ஒத்துக் கொள்ளும்போது அப்படி ஏன் செய்யக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பஞ்சாயத்துத் தலேவர், பஞ்சா யத்து மெம்பர்கள்—விவசாயிகள் இவர்களுக்குள்ளே அபிப்பிராய பேதம் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் தலேவர் அவர்களே, அந்தப் பகுதியில் உள்ள கோடிக்கணக்கான மக்கள் குடிதண்ணீருக்குக் கஷ்டப்படுகிறுர்கள். மதிப்பீட்டுக் கமிட்டி செந்துறை சென்ற போது அதைப் பார்க்க முடிந்தது. அந்த ஏரித் தண்ணீர் கூடச் சிவப்பாகத்தான் இருக்கின்றது. இந்தத் தண்ணீரையாவது குடி தண்ணீருக்குத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதாக ஸ்பெஷ லாக ஏற்படுத்த வழிவகை செய்ய முடியுமா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : குடிதண்ணீருக்கு இதன் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு எவ்விதத் தடையும் இல்லே. இப்போதே குடிதண்ணீருக்கும், குளிப்பதற்கும், ஆடுமாடு களுக்கும் இதைப் பயன்படுத்தி வருகிறுர்கள். இதைத் தவிர குடிதண்ணீருக்காக கிணறு இருக்கிறது. பாப்பாத்தி குளம் என்பதாக தனியாகக் குளம் இருக்கிறது.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம் : பஞ்சாயத்து யூனியனில் கிணறு வெட்டிக் கொடுத்திருக்கிறுர்கள். ஆனல் கிணற்றில் தண்ணீர் இல்லே. ஆகவே, குடிதண்ணீருக்கு மிகவும் பயன்படுகிற இந்தக் குளத்தை குடிதண்ணீருக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்று செய்ய முடியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : குடிப்பதற்கு தண்ணீர் எடுப்பதை யாரும் தடுக்கவில்லே. மேலும் பஞ்சாயத்து யூனியன் எடுத்த கிணற்றில் தண்ணீர் இல்லே என்ருல் அதை ஆழப்படுத்தி, பம்பு செட்டு வைக்கக்கூட முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

[8th November 1966

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த நாகம்பந்தல் கிராமத்தில் உள்ள ஏரித்தண்ணீரை குடிப்பதற்கும், குளிப்பதற்கும் மட்டும் பயன்படுத்தவேண்டும் எனச் செய்யவேண்டும் என்பதாக அக்கிராம மக்கள் விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயத்திற்குப் பயன்படுத்துவதைத் தடுக்கக்கூடாது என்பதாகவும் வேறு யாராவது மகஜர் அனுப்பியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. செ. ம. அ. மஜீத் : அந்தமாதிரி தகவல் இல்லை. இப்போதுள்ள ஏரியில் குடிதண்ணீர் எடுத்துக்கொள்வதைப் பற்றித் தடை எதுவும் இல்லை. பஞ்சாயத்து எலெக்ஷன் விரோதம் காரணமாக அதில் இருந்து பாசனத்திற்கு விடக்கூடாது என்கிற ஆட்சேபம் எழுந்திருக்கிறது.

கனம் சபாநாயகர் : ஆயக்கட்டுகளுக்கு இருக்கிற உரிமையை மாற்ற யாருக்காவது ரைட் இருக்கிறதா?

கனம் திரு. செ. ம. அ. மஜீத் : அம்மாதிரி உரிமை இல்லை. அப்படிச் செய்கிற உத்தேசம் சர்க்காருக்கு இல்லை என்று சொல்லுகிறேன்.

MR. SPEAKER : You will have to acquire the tank and subject to the judicial proceedings only, you can think about changing it into a drinking water tank.

Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) ALLEGED HARASSMENT OF AGRICULTURISTS BY PROCUREMENT OFFICIALS.

*** திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே. கிராமங்களிலே ப்ரொக்யூர்மெண்டு செய்யும் அதிகாரிகள் விவசாயிகளுக்கு இழைக்கின்ற அநீதியைப் பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்ற பிரேரேபணையைக் கொண்டுவர உங்கள் அனுமதியை விரும்புகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது விவசாயிகளை நிர்ப்பந்தப்படுத்தி, கஷ்டப்படுத்தி ப்ரொக்யூர்மெண்டு செய்ய கட்டளை பிறப்பிக்கவில்லை, எளிதான முறையில், சுலபமான முறையில் ப்ரொக்யூர்மெண்டு செய்யப்படுகின்றது என்பதாகக் கூறினார்கள். ஆனால் தஸ்தாவேஜு பூர்வமாக கையில் வைத்திருக்கிறேன். நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அங்கங்கே உள்ள அதிகாரிகள் ஐந்து செண்ட் உள்ளவனுக்கு ஒரு மூட்டை, பத்து செண்ட் வைத்துள்ளவனுக்கு இரண்டு மூட்டை, ஒரு ஏக்கரா வைத்துள்ளவனுக்கு 20 மூட்டை என்பதாக கட்டாயமாக வைக்க (ஒரு சீட்டைக் காட்டி) இது போன்ற பாரங்களை அச்சிட்டு சம்மனைப் போலக் கொடுத்துவிடுகிறார்கள். எத்தனையோ பேர்களுக்கு இதுபோல அனுப்பப்பட்டுள்ள நோட்டீஸ்களை நான்